திராவிடன்

வார வெளியீடு ஆசிரியர் என்.வி.நடராசன்

மலர் : 7 மடல் : 25 • 5—2—54 வெள்ளி • விலை 0—3—0 வெளிநாடு 0—3—6

நன்றி உரித்தாகுக

திராவிடர் திருநாளையொட்டி எனக்கு வாழ்த்து மடல் அனுப்பிய தோழர்கள் அனைவருக்கும், எனது பணிவன்பான வணக்கத்தையும் நன்றியையும் இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்வதுடன் அடுத்து வரும் திராவிடர் திருநாளில் நமது கொள்கையின் வெற்றிப் பட்டியலை விரிவாகக்காணும் வகையில் திராவிடத்தின் வாழ்வுக்காக பணியாற்றவும் வேண்டுகிறேன்.

வணக்கம்

என். வி. நடராசன்

தட்டிக் கேட்கிறது’

திராவிடம்—வட நாட்டு ஆதிக்கபீடமே பதில் என்ன?

மேலை நாட்டிலே ஒரு முறை உண்டு. தன்னால் வளர்க்கப்பட்ட நாய்—ரொட்டி போட்டு, பாலூட்டி காரிலே போகும்போதும் தன் மடியிலே வைத்துக் கொஞ்சி, அதுவும் வால் குழைக்க விளையாட்டுக் காட்டி வீட்டோடு எனநேரமும் வைக்கப்பட்டுப், பல்லாண்டு பழகிய நாய் திடீரென்று பித்தம் பிடித்துக் கடிக்க ஆரம்பித்தால், அது தனக்கு இனி பயனில்லை என்று புலப்பட்டால்; அதை வளர்த்தவனே அழிக்கலாம்! அவனுக்கு அதிகாரமுண்டு! அதுமட்டுமல்ல அதற்குப் பெயர் ‘அன்புக் கொடுமை’

இந்த நிலையிலே, தென்னாட்டு தொழில் மன்னன்—இருண்ட திராவிடத்தின் ஒரு விளக்கு, சுந்தரமய்யங்கார்களைப் போட்டிச் சந்தைக்கு கூவி அழைக்கும் வியாபாரக் கோமான் ஜி. டி. நாயுடு அவர்கள் 30-1-54ல் சென்னையிலே தன்னுடைய ‘பொருட் காட்சி முடிந்த பின், தன்னுடைய விஞ்ஞான பொக்கிஷத்தை, வீதியில் வைத்து உடைக்கப் போகிறேன்” என்றார்!

‘ஐயையோ! அவைகள் அரசாங்கத்தின் சொத்துக்கள்’ என்றலறினர், சில அரசியல் ‘மேதைகள்’

ஆனால், ‘உடைக்க வேண்டும்! அதுதான் கடையராட்சிக்குக் கடைசிச் சாவுமணி’ என்றனர். பொதுமக்கள்!

‘வேண்டாம்! வேண்டாம்! பலநாள் வியர்வை வெள்ளத்தை விழலுக்கு நீராக வீணக்க வேண்டாம்! வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்’ என்று அழுத்தந் திருத்தமாக சிலர் கழுத்தை நீட்டி நீட்டிக் கத்தினர்; கடைசி முறையாக.

‘பொறுத்திருந்து பார்ப்போம்! திருவிடத்தின் அறிஞன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசா உத்தமன் ஜனநாயகத்தின் வாரிசு—எதிர்கால வேலையின் தத்துப்பிள்ளை கண்ணியத்தின் காவலன் தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணா, என்னசொல்கிறார் பார்ப்போம்! என்று கூடியிருந்த ஒருலட்ச மக்களின் இருதயங்கள் ஏங்கியபடி இருந்தன.



தொழிலறிஞர் ஜி. டி, நாயுடு

‘நாயுடு அவர்களின் பொருள்களை அடித்து உடைப்பதால், அந்தச் சாமான்களின் மீது விழும் அடி; அதன்மீது மட்டும் விழுவதல்ல—ஆளும் கட்சியின் இதயத்தில் அது பாயும். நாயுடு அவர்களின் தொழில் அறிவை நல்ல வகையில் பயன் படுத்திக் கொள்ள முடியாத சர்க்கார் வாழும் நாட்டிலே சாமான்கள் இருந்து என்ன பயன்?” என்றார் அண்ணா.

பசித்தயானை, கரும்புப் பயிரிலே புகுந்ததுபோல—அங்கே வைத்திருந்த அற்புத விஞ்ஞானக் கருவிகள் மீது சம்மட்டிகள் சதிராடின.

புதிய பொருள்கள் சின்னபின்னப்பட்டுக் கிடந்தன! அந்தக்காட்சி வடநாட்டு ஏகாதிபத்திய ஆட்சியின் இறுதி காலத்தை, எழிலோவியமாக எடுத்துக் காட்டியது.

“தோழர் நாயுடுகாரு அவர்கள் அவசரப் பட்டுவிட்டார்; என்னைக் கேட்டால் இவைகளை உடைத்தது தவறு என்பேன்? என்ன லாபம்? என்று பெரியார் அவர்கள் முடிவுரையில் குறிப்பிட்டார்கள்.

“உடைப்புப் போராட்டத்தை மூட்டி அதன் மூலம் நம் கட்சியை நடைபோடவைக்கும் நிலையிலே நாம இல்லை என்பதை நாடு அறியும். எனவே ‘உடைப்பதென்றால்’ இங்கே உள்ள பொருள்—பல கட்சிப் பெரியவர்கள் புரிந்து கொள்ளத் தவறிய பொருள்; உடைத்தல் என்றால், “அதிருப்தி” கண்டனம், எச்சரிக்கை; ஏன்; ஆரம்பத்திலே குறிப்பிடப் பட்டுள்ள பித்தம் பிடித்த குக்கலை கொல்லும் நிலைதான்!

‘தூங்குகிறவன்’ பக்கத்திலே சென்று நின்றால்; அவன் எழுந்திருக்கிற வரையிலே நாம் காத்திருக்க வேண்டுமே தவிர, நாம் வந்ததும் அவன் உடனே பேசுவான் என்று எப்படி எதிர்ப்பார்க்க முடியும்? தூங்குகிறது அரசாங்கம்! எழுப்புகிறார் நாயுடு எப்படித் தவறாகும்?

தூங்குகிறவனைத் தட்டி யெழுப்புவதுதான் இந்த உடைப்புத் திருவிழா.

இன்று தென்னாடு உள்ள நிலை என்ன? உடைப்புக்குமுன் இங்கிருந்த உறக்க நிலை என்ன? நாயுடுவின் பெருமை பற்றிப் பேசாதார், புரிந்து கொள்ளாதார் யார்? இன்று, குறிப்பாக சென்னை சிந்துகிற கண்ணீர்—‘இந்து’ பத்திரிகையும் அவரைப்பற்றி எழு

12-ம் பக்கம் பார்க்க

கவிஞர் கண்ணதாசன்

அம்பில் தர்மலிங்கம்

ஏஜெண்டுத் தோழர்களுக்கு

முக்கிய அறிவிப்பு

ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள (ஜனவரி மாதம் முடிய) பட்டியலில் கண்டுள்ள தொகையை இத்திங்கள் 10-ந்தேதிக்குள் அனுப்பி வைக்காத ஏஜெண்டுகளுக்கு அடுத்தவார இதழை அனுப்ப இயலாது என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம். —நிர்வாகி

திராவிடன்

சென்னை : 5—2—54 : வெள்ளி

‘கதவு திறக்கப்பட்டது!’

★

வடநாட்டு வல்லூறுகள் — தென்னாட்டில் நுழையாமலிருக்க ‘டால்மியாபுரம்’ என்ற கதவைச் சாத்தினர் இந்நாட்டுக் காவலர்கள். தென்னாட்டு வளப்பத்தைக் கொள்ளை கொள்ளும் கோஷ்டியின் வெள்ளத்தைத் தடுக்கும் ‘கதவு’தான் ‘கல்லக்குடி’. ‘கதவு’ அமைத்த தர்மலிங்கம், கண்ணதாசன் உள்ளிட்ட தோழர்களுக்கு சிறைக் ‘கதவு’ திறக்கப்பட்டு விட்டது.

“சென்று வருவீர்! நீங்கள் நின்ற இடத்திலிருந்து நாங்கள் நடப்போம்!”

எந்த இனத்தின் இழிவை நீக்கிட—இருள் சிறைக்குள் இளமுகத்துடன் நுழைந்தீரோ 22 பேர்; அதே அடிப்படையில் ஆவியைப் பணயம் வைத்தும் பணியாற்றுவோம்! என்று வாழ்த்துக் கூறி லட்சிய வீரர்களை வழி அனுப்புகிறோம்.

பதினெட்டு மாதம் சிறைத் தண்டனை! எதிர்பார்த்ததுதான்! தாளமுத்து நடராசனைப் பிணமாக்கித் தந்த சர்க்கார்—அவர்களின் ரத்தத்தைக் குடித்து, அட்டாணை பாடி மகிழ்ந்த அதே ஆச்சாரியார் சர்க்கார், தோழர் கண்ணதாசன் கண்களைப் பிடுங்கச் சொல்லியிருந்தாலும் கூட, ஆச்சரியப்படுவதற்கில்லை. அவரின் கண்களிலிருந்து சீர்கெட்ட சமுதாயத்தை, செத்துவரும் தமிழை, சர்வாதிகார ஆட்சியை மறைத்து விடலாம்! ஆனால்; சிந்தனை சிற்பிகளுக்கு உலகத்தை அதிலே உருகெட்டுவரும் தனினத்தை மீட்க ஓய்வாக, சிந்திப்பதற்கு ஒரு உருவான திட்டம் தீட்டுவதற்கு; சிறை, நல்லறிவோர் மணக்கும் நல் வீடு என்பதை, சட்டத்தை நீட்டி 18மாதம் தண்டித்த சர்க்கார் உணர வேண்டும்,

தி. மு. கழகத்தவரைத் தண்டித்தே—சிறையில் தள்ளியே, தங்களாட்சி தாண்டவமாட முடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்த சர்க்கார்—நமது தோழர்கள் 22 பேர் மீது சாற்றப்பட்ட குற்றச்சாட்டுகள் விசித்திரமானது! ‘கற்களை வீசினர்’ என்பது முதற் குற்றச்சாட்டு!

‘ரயில் பாதையிலே உட்கார்ந்தனர்’ என்பது அடுத்தது! அத்துடன் நெ. 613 வண்டியை நிறுத்தியதாகவும் நமது வீரர்கள் 22 பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. ‘இருண்ட’ சட்டத்தின்படி வேண்டுமானால் அது தண்டிக்கப்பட வேண்டியதாக இருக்கலாம். ஆனால் ஆட்சிபீடத்தினர் உணர வேண்டும்; இரயிலை அல்ல அவர்கள் நிறுத்தியது; நமநாட்டைச் சுரண்டப்படும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தைத் தான் நிறுத்தினர்.

அம்பில் தருமலிங்கம்—திருச்சி மாவட்டம், தி. மு. க. வுக்குத் தந்த ‘தேனதுளி’—திராவிடர் கழகம் பயிரிட்ட திராட்சைக் கொத்து. பஞ்சாயத்து போர்டிலே தலைவனாக இருக்க பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி!

அறிஞர் அண்ணாவின் சொல்லென்ற அணையா விளக்கில் படித்து சுயமரியாதை இளைஞனாக, மாறி நாடகமேடையில் நடமாடும் முத்தமிழ வித்தகன்! கண்ணதாசன்.

“ஆவியா! தருகிறோம்! துப்பாக்கியா! சுடு!” சிறையா. தள்ளு!” ஆனால்; திராவிடத்தை அடைய மட்டும் எங்களை மறுக்காதே!’ எனப்பணியாற்றியவர் இந்த 22 வீரர்கள். உலகத்தின் பல பகுதிகளில் தன் தாயக விடுதலைக்காக உழைத்த உத்தமர்கள் சிறைசென்று வரலாற்றில் உட்கார்ந்து விட்டனர். அவர்களின் அடுத்த பக்கத்தில் அமர 22 பேர் ‘நுழைவுச் சீட்டு’ பெற்று விட்டனர், ‘கதவும்’ திறக்கப்பட்டுவிட்டது. ‘வரலாறு பக்கங்களை தயாரித்தபடி இருக்கிறது. பெருமைப்படுகிறோம்! நாம்.

சிலை செய்ய விரும்பிய சிற்பி, சிலைகளைச் செய்து, தன் சிந்தை மகிழ்க்கிறான்! அவன் பணி முடிந்துவிட்டது. பித்தன் ஒருவன் அதன் மீது சேற்றை வாரிப்பூசி விட்டால்?...சிற்பிக்கா அது சேதம்? அதுபோல டால்மியாபுரம்—கல்லக்குடியாக ஆக வேண்டும் என்று தி. மு. கழகம் முடிவு செய்தது. அறிஞர் அண்ணா அதற்கான விளக்கங் கூறினார் கடமையாற்றினர். சிற்பியின் சிலைபோல கல்லக்குடி இன்னும் காட்சியளித்தபடி இருக்கிறது! சிற்பியின் மீது சேற்றைப் பூசியவன் செயல்போல, தி. மு. கழகத்தின் சிந்தனை சிற்பிகள் 22 பேரை சிறையிலே தள்ளிவிட்டனர்! ‘சிலை’யோ சிரிக்கிறது! ‘பித்தன்’ நிலையில் நாடாள்வோர் உள்ளனர். விரைவிலே பித்தம் தெளிந்து சிலையை வணங்கும் காலம் வராமல் போகாது. சட்டப்படி ‘கல்லக்குடி, சம்மதம் பெறுமல் இருக்கப் போவதில்லை’ இருக்காது! இருக்கவிடமாட்டோம்.

பதினெட்டு மாதம் தண்டித்தல் அவர்களுக்கு பேனுவின வேலை! பொழுது போக்கு!— நமக்கோ அது உயிரின்வாதை. கழகத்தின் வளர்ச்சிக்கோ 18 மாதம், ஆட்சியாளரால் கட்டித்தரப்பட்ட 18 படிக்கட்டுகள்.

கல்லால் அடித்தும், கடும் விஷம் கொடுத்தும், தூக்குக்கயிறுகளை மாட்டியும் கலைக்க முடியாத நமது இயக்கத்தை, ‘சிறைக் கதவு’ திறந்து உள்ளே தள்ளிவிட்டால், சிதைந்து விடும், சோர்வடைந்து விடும். சின்னபின்னப்பட்டுவிடும், என்ற ஆட்சியாளரின் அவசர முடிவு கண்டு நாம் அஞ்சவில்லை! சிரிக்கிறோம்!

“கழகத்தின் கண்மணிகளே! செயலாற்றிய செம்மல்களே! செல்க! வெல்க!”

வாழ்வை ஒட்டப்பந்தயமாக நினைத்து வாழும் நமக்கு இந்த பதினெட்டுமாதம்! பாரமல்ல! ஓய்வு நாள்! நீங்கள் வெளிவரும் போது நிச்சயம் ‘கல்லக்குடி’ சட்டப்படி வர்ணப்பூச்சு பெற்று, சிலையாக, உங்களின் உறுதியைவீரத்தை, உலகுக்குகூறி நிற்கும் என்று உறுதி கூறுகிறோம்; நமது உழைப்பின் மீது பெற்ற அறப்போர் மீது ஆணையிட்டு உரைக்கிறோம்! நீங்கள் உள்ளே! நாங்கள் வெளியே! நீடிக்காது இந்த நிலை.

★

கோயங்கா பத்திரிகையின் குதர்க்க புத்தி.

தென்னாட்டுத் தொழில் நிபுணர் கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவாற்றலை, திறமையை அறியாதவர்கள் இந்தியாவில் எவரும் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல வெளி நாடுகளிலுள்ள தொழில் துறை அறிஞர்கள், ஜி. டி. நாயுடு அவர்களின அபார திறமையையும் அவர் கண்டுபிடித்த விஞ்ஞானக் கருவிகளின் மேன்மையையும் கண்டு அதிசயித்துள்ளனர்.

இவ்வித ஆற்றல் படைத்த தொழில் நிபுணரை—அவரால் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞானக் கருவிகளை நம நாட்டின் முன்னேற்றத்திற்கான வகையில் பயன்படுத்திக் கொள்ள சென்னை மாநில அரசியலாருக்கு மனமிருந்தும் மார்க்கமில்லாமலும், டெல்லி ஆதிக்கபீடமோ மார்க்கமறிந்தும் மனமில்லாமல் நாயுடுவின் கோரிக்கையை—அவரது அறிவாற்றலைப் புறக்கணித்து வருகிறது.

தோழர் ஜி. டி. நாயுடுவுக்கு டெல்லி அதிகார வர்க்கத்தினரால் செய்யப்பட்டு வந்த இவ்வநீதியை நம் மாநில ஆட்சிபீடத்தாரும், குறிப்பாக தேசியத் தலைவர்களும் நன்கு அறிவர். அறிந்தும் டெல்லி தேவதைகளின் ஓர வஞ்சனையைத் தட்டிக் கேட்டார்களில்லை. கேட்குமளவிற்கு வடநாட்டு ஆதிக்கமும் இவர்களுக்கு உரிமை கொடுத்திருக்கவில்லை,

எனவேதான் 30-1-54 நாளன்று அந்த விஞ்ஞான வித்தகன் ஜி. டி. நாயுடு மனவேதனையடைந்து—தனது இணையற்ற கண்டுபிடிப்புகளான கருவிகளை தூள் தூளாக்க—பொது மக்களின் சம்மதத்தைக் கேட்டார். முன்னில் தென்னாட்டுப் பொதுமக்களின் சொத்தாக ஆகவேண்டிய அவரது விஞ்ஞானக்கருவிகள், பொதுமக்களின் தீர்ப்பை அறியாது, மாதென்றும் செய்வது கூடாதல்லவா—ஆகவே மக்களின் மகத்தான தீர்ப்புக்கேற்ப தனது நாட்டை, மக்களை, வாழ வைக்க தனது தொழில் அறிவை பயன்படுத்தத் தடையாயுள்ளவைகளை தகர்த்தெறியும் வகையில் அவர் கண்டுபிடித்த விஞ்ஞானக் கருவிகள் மீது சம்மட்டி யடிகள் மோதின.

இந்த சம்மட்டியடி—ஜி. டி. நாயுடு அவர்களின் தனிப்பட்ட அடியல்ல, நம்நாட்டு வாழ்வையும் வளப்பத்தையும் சுரண்டிச் சென்று சுயராஜ்யத்தின் பேரால் ஆதிக்கம் செலுத்தும வடநாட்டு ஏகாதிபத்ய ஆட்சி முறைக்கு தென்னாட்டு மக்கள் ஏகோபித்து கொடுத்த சம்மட்டி அடியாகும்.

திராவிடத்தின் அரசியல் வரலாற்றிலே என்றென்றும் நிலைபெற்றுள்ளதான இச்சம்பவத்தன்று நம் நாட்டு காங்கிரஸ் தலைவர்களும் ஏக இந்தியா கொள்கை பேசும் தோழர்களுங்கூட டெல்லி ஆதிக்கத்தின் கோரப்பிடிப்பின் அநீதியைக் கண்டித்துள்ளனரென்றால் அக்கொடுமையை மேலும் விவரிக்கவும் வேண்டுமோ?

ஆனாலுங்கூட இந்நிகழ்ச்சி, வடநாட்டு முதலாளியின பத்திரிகையான ‘தினமணி’யின் கண்களுக்கு மட்டும வெறிச் செயலாய்க் காணப்படுவதாக ஒப்பாரி வைக்கிறது. தென்னாட்டின் நல்வாழ்வைக் குறித்தும் அதற்கான பிரச்னைகளிலும் ‘தினமணி’களுக்கு நல்ல எண்ணமும், கண்ணியமும், இருக்குமென்று நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. அவைகளின் பிறவிக் குணம் நாமறிந்ததேயாகும்.

எனினும் வெந்த புண்ணில் வேல்கொண்டு குத்துவது போல தென்னாட்டுத் தொழில் அறிஞர் ஜீ. டி. நாயுடு—தனக்காக மட்டுமல்லாமல், ‘தென்னாட்டு தொழில்துறை வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்கப்பட்டு வரும் கொடுமையை அம்பலமாக்கி. அதற்கான எதிர்ப்பைத் தெரிவிக்கும் செயலில் இறங்கியது வெறிச்செயல் என்று கூறும் ‘தினமணி’யின் போக்கினை அகம்பாவமான குதர்க்க புத்தியை கண்டிக்காமலிருக்க முடியவில்லை.

வெள்ளையர் இந்தியத் துணைகண்டத்தின் பொருளாதாரத்தைச் சுரண்டுகின்றனர் எனவே அதை எதிர்க்கும் வகையில் (நாம் காசுகொடுத்து வாங்கிய) அந்நாட்டுத் துணிகளை கொளுத்த வேண்டும், அப்போதுதான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் — பொருளாதார வேட்டையின் கொடுமையை மற்ற நாட்டினரும் அறிவர் என்று காந்தியடிகளால் கூறப்பட்டு வெள்ளையர் நாட்டுத் துணிகளை அன்று—தேசியப் போராட்டத்தில் கொளுத்தியது ஏன?

வடநாட்டுப் பொருளாதார வேட்டையின் அளவு மீறிய கொடுமையை எதிர்க்கும் முகத்தான் தோழர் ஜி, டி. நாயுடு தமது கருவிகளை பொதுமக்களின தீர்ப்புக்கேற்ப தகர்த்தெறிந்தது வெறிச்செயல் என்று ‘தினமணி’ வர்க்கம கூறுமானால், அன்று அந்நிய நாட்டுத்துணிகளை காசு கொடுத்து வாங்கி கொளுத்தியது என்ன செயல் என்று கேட்கிறோம்.

‘தினமணி’ பரம்பரைக்கு இவ்வுண்மை தெரிந்திருந்தும். வடநாட்டு ஏகாதிபத்தியத்திற்கெதிராக தென்னாட்டு மக்களின மகத்தான சக்தி திரண்டெழுகிறதே என்ற அச்சத்தால், நடுக்கத்தால், 30-1-54ந் தேதிய சரித்திர சம்பவத்திற்கு தனது விவேகமற்ற தத்துவார்த்தத்தைக் கூறுகிறது ‘தினமணி’.

இவ்வித உளுத்துப்போன அரசியல் செப்படி வித்தைகளால், திராவிடத்தில் பொருளாதார வேட்டையாடிவரும் வடநாட்டு ஆதிக்கத்திற்கு இனியும் பராக் கொடுத்து பாதுகாக்க முடியாது என்பதை ‘தினமணி’ வர்க்கம் தங்கள் புத்தியில் பதிய வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறோம்.

★

Regd. No. M. 4370

வேதனைக்குரல்...தொடர்ச்சி

கருவிகள் மீது பாயும் இச் சம்மட்டி—? ? ?

அறிஞர் அண்ணா

நாயுடு அவர்களின் அறிய மூளையை பயன்படுத்திக் கொள்ளாத சர்க்காரிலே இத்தகைய சாமான்கள் இருந்து பயன் என்ன? மற்ற நாடுகளில் புதிய கண்டு பிடிப்புகளை யாரேனும் கண்டுபிடித்தால் சர்க்கார்தாமாக அவர்களிடம் சென்று அதற்கு உதவி செய்வார்கள். அங்கெல்லாம் மக்களுக்கும் சர்க்காருக்கும் தோழமை உண்டு. இங்கே அது இல்லை. புதிய கண்டுபிடிப்புகளை அறிஞர் நாயுடு அவர்கள் செய்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளும் மனமில்லாத சர்க்கார் இருக்கிறது இங்கே. எனவே தான் உடைக்கப்படாது என்று கருதிவந்த நான் உடைக்கப்பட்டாக வேண்டும் என்று பேசுகிறேன். இந்தக் கருவிகள் மீது பாயும் சம்மட்டியடி யார்யாருக்குப் பாயவேண்டுமோ அவர்களுக்கு—சர்க்காருக்கு பாயும் என்றார்.

*

தோழர் எஸ். குருசாமி

இன்று நாம் கூடியுள்ள இதே நாளில்தான் உத்தமர் காந்தியாரை ஒரு மதவெறி பார்ப்பான் கோட்சே என்பவன் சுட்டுக் கொன்றான். இச்சாமான்களை உடைப்பதின் மூலம் சர்க்காருக்கு நம் உணர்ச்சியைத் தெரிவிக்க வேண்டும் இங்கே இது உடைபட்டால் டெல்லி சர்க்காரும் உணருவார்கள் என்றார்.

*

தோழர் எஸ். பி. ஆதித்தன்

நாயுடு அவர்களின் அரிய கண்டு பிடிப்புகளைப்போற்றி சர்க்காருக்கு புத்தி வரவழைக்க ஓரிரு சாமான்களையாவது உடைக்க வேண்டும் என்றார்.

*

உடையுங்கள்! உடையுங்கள்!

டெல்லி ஆதிக்கத்தை தகர்த்தெறியுங்கள்

தோழர் ஜி. டி. என்.

என்னைப் பொருத்தவரையில் உடைப்பதே நல்லது என்று கருதுகிறேன். அடுத்தாற்போல் பெரியார் அவர்கள் பேச இருக்கிறார், ஆகவே உடைக்கலாமா வேண்டாமா என்ற பிரச்னையை பொது மக்களாகிய உங்களின் தீர்ப்புக்கு விடுகிறேன் என்று கூற கூட்டத்தில் கூடியிருந்தவர்களில் 80 சதவிகிதம் உடைத்தே ஆகவேண்டும், டெல்லி ஆதிக்கத்திற்கு அறிவு புகட்ட வேண்டும் என்று மனவேதனையுடன் கைகளை உயர்த்திக்கூறினர். உடனே ஜி. டி. நாயுடு, ஜாடை காட்டியவுடன் சம்மட்டியோடு நின்று கொண்டிருந்த தோழர்கள் சாமான்களை நொறுக்கித் தள்ளினர்.

*

பெரியார்

தோழர்களே! இன்று நீங்கள் செய்த காரியம் மிகத்தவறான காரியம். பயித்தியக்காரத்தன காரியம் என்றே சொல்லுவேன் அதோடு இந்தப்படி உடைத்ததானது முட்டாள்தனமான காரியம்; (பலகுரல்கள் வாபஸ் வாங்கு

ரமணி—சிவசுப்ரமண்யம்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் மகள் தோழியர் ரமணிக்கும், சேலம் மாவட்டம் மணப்பள்ளி தோழர் அ. இராமசாமி மகனார் சிவசுப்ரமண்யத்துக்கும் கரூர் அம்பிகை டாக்கீசில் 7-2-54 காலை 9 மணிக்கு தோழர் முத்து இராசாக்கண்ணனார் எம். எ- பி. ஒ. எல் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

ரவி—சரோஜா

முற்போக்கு எழுத்தாளரான மதுரைத் தோழர் ரவி (திரவியம்) தோழியர் சரோஜா அவர்களை வாழ்க்கைத்துணைவியாக ஏற்கும் திருமணநிகழ்ச்சி 5-2-54 வெள்ளி காலை 8-30 மணிக்கு மதுரை தெற்கு மாசிவீதி 203-ம் எண்ணுள்ள மண்டபத்தில் மதுரை திருமணப்பதிவாளர் முன்னிலையில் நடைபெறும். தோழர் அ. சி. பரந்தாமனார் தலைமை வகிப்பார். அன்றுமாலை 5.30 மணிக்கு வரவேற்பு நடைபெறும்.

என்று எழுந்தன) பெரியார் தொடர்ந்து பேசுகையில்

இந்தப்படி உடைக்க வேண்டாம் என்று யார் சொல்லுகிறார்கள். கடவுள் உருவங்களை உடைக்கவேண்டும் என்று சொல்லுகிற நான் சொல்லுகிறேன். இவைகளை உடைக்க வேண்டாம் என்பது. ஏன்? உடைக்க வேண்டியது இவைகளையல்ல. விநாயகனை உடைக்க வேண்டும்; கிருஷ்ணனை உடைக்க வேண்டும்; ராமனை உடைக்க வேண்டும். இன்னும் இதுபோன்ற கடவுள்கள் எனப்படும் அநாகரீக முட்டாள்தனமான காட்டுமிராண்டித்தனமான ஆபாச உருவங்களை உடைக்க வேண்டும், டெல்லி ஆட்சியை அல்லவா உடைக்க வேண்டும்! கூட்டம் முடிகிறவரையில் நாயுடுகாரு அவர்கள் பொறுத்திருக்காமல் உடைத்து விட்டார். நமக்கு ஆத்திரம் இருக்கிறது. ஆனால் அதற்காக அந்த ஆத்திரத்தை இப்படி சாமான்கள் மீது காட்டி உடைக்கக் கூடாது. சம்மட்டி எடுத்து இந்த சாமான்களை உடைத்ததற்கு பதிலாக கையிலே ஆளுக்கொரு கத்தரிக்கோல் எடுத்துக் கொண்டு, உச்சிக் குடுமியை கத்தரிக்க வேண்டாமா? ஏன் நம்மை அழுத்தி, அடக்கி ஆளுகிற வடநாட்டு ஆட்சி மீது படையெடுக்கக் கூடாது? வடநாட்டானுக்கு இங்கே என்ன வேலை. வடநாட்டானை ஏன் இங்கே விடவேண்டும்? வடநாட்டு பார்க்குகளை ஏன் இங்கே அனுமதிக்க வேண்டும்?

நமக்கு வேலை மிகமிக அதிகமாக இருக்கிறது. இன்றைய கஷ்டங்களுக்கெல்லாம் அடிப்படையாய்—காரணமாய் இருக்கும் வடநாட்டு ஆட்சியையும் பார்ப்பனையும் ஒழித்துக் கட்ட வேண்டும். இந்த 1954-ம் ஆண்டிலே இதற்கான ஒரு பலமான எதிர்ப்புப் போராட்டம் நடத்த வேண்டும். அதனால்தான் சாமான்களை உடைக்கக் கூடாதென்று கூறினேனேயல்லாது வேறில்லை. என்றாலும் உடைத்தாய் விட்டது. இதன் மூலமாவது நம் நாட்டிலுள்ள வடநாட்டு ஆதிக்க அடிமைகளுக்கு புத்தி வரட்டும் என்று கூறி கூட்டத்தை முடித்தார்.

★

திருப்பத்தூரில்

நிதியளிப்பும் ஐவர் வரவேற்பும்

[வ. ஆ.] திருப்பத்தூரில் தி. மு. கழக சார்பில் 7.2.54 மாலை ஈத்கா மைதானத்தில் மாபெருங் கூட்டம் நடைபெறும். வழக்கறிஞர் ஜி சாமி நாயுடு, பி. எ., பி. எல்., தலைமை வகிப்பார். அறிஞர் அண்ணா, இரா, நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், கே ஏ மதியழகன், என். வி. நடராசன் சொற்பொழிவாற்றுவர்.

மணப்பாறைக்கு

கலைஞர் கருணாநிதி வருகை

7—2—54 மாலை 6-மணிக்கு மணப்பாறை தி. மு. கழக சார்பில் வரவேற்புக் கூட்டம் நடைபெறும். கலைஞர் கருணாநிதி, சிவாஜி கணேசன் "நாட்டில நாம்" என்னும் பொருள்பற்றி பேசுவர்.

போளூருக்கு அண்ணா வருகை

(வ. ஆ) போளூர் தி. மு. கழக சார்பில் 9-2-54 மாலை மாபெருங் கூட்டம் நடைபெறும். அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றுவார் தோழர். ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமைவகிப்பார். அது சமயம் தூத்துக்குடி நிதிக்கு பணமுடிப்பு அளிக்கப்படும்.

புரசை குறள் நெறிக் கழகம்
சென்னை

7-2-54 காலை 9-மணிக்கு குறள் வகுப்பு புரசை கங்காதீசுவரர் கோயில் அருகாமையில உள்ள நகராண்மைக் கழக ஆண் பள்ளியில் நடைபெறும். ஆசிரியர் நா. அறிவழகன்.

குளை தி. மு. கழகம் சென்னை

7-2-54 ஞாயிறுமாலை கல்யாண மேஸ்திரி தோட்டத் தெரு 31-வது இல்லத்தில் 6- மணிக்கு தோழர் முகவைபாண்டியன் தலைமையில் திராவிடர் திருநாள் விழாவும், இரவு 7- மணிக்கு தோழர் பரமானந்தம் அவர்களால் ரத்தக்கறை என்னும் காலட்சேபமும் தேனீர் விருந்தும் நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவாது வருமாறு கேட்டுக்கொள்வதாக செயலாளர் சு. பாலன் அறிவிக்கிறார்.

சேலம் மாவட்டத்தில்

பொதுச் செயலாளர் அண்ணா

28-2-54 முதல் 3-3-54 வரை சேலம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய அறிஞர் அண்ணா ஒப்புதல் அளித்து விட்டார்கள் சேலம் மாவட்ட தி. மு. கழக துணைச்செயலாளர் பி. ராமலிங்கம், பொருளாளர் குப்புசாமி ஆகிய இருவரும் 2-2-54 அன்று சென்னை வந்திருந்து பொதுச் செயலாளரை அறிவகத்தில் சந்தித்து சுற்றுப்பயணத்துக்கான ஏற்பாடுகளை செய்து விட்டுச் சென்றனர்.

என். வி. என். சுற்றுப் பயணம்

பிப்ரவரி 7. திருப்பத்தூர்
14. விழுப்புரம
21. காங்கேயம்
22. ஊத்துக்குளி,
27. பெண்ணாத்தூர்

பிற பின்னர் அறிவிக்கப்படும்

பம்பாய் தி. மு. கழக முதல் மாநாடு

தோழர்களே,

நாளது மார்ச் 20, 21-ம் நாட்களில் நடைபெற விருக்கும் பம்பாய் தி. மு. கழக முதல் மாநாட்டில் கலந்து கொள்ள அறிஞர் அண்ணா அவர்கள் ஒப்புதல் தந்து விட்டார்கள்.

'பரப்பிரம்மம்' 'நேருக்கு நேர்' ஆகிய நாடகங்கள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் மீதும், மற்றும் தோழர்கள் மீதும் சென்னை உயர் நீதிமன்றத்தில், ஆச்சாரியார் அவர்கள் வழக்குத் தொடர முயற்சித்துக் கொண்டிருப்பதால் மேற்படி நாட்களே வசதியாக விருக்கின்றன.

"முயற்சி" மலருக்கு கழக முன்னணி வீரர்களிடமிருந்து கட்டுரை கதை, கவிதை ஆகியவைகள் வரப்பெற்று அச்சாகிக் கொண்டிருக்கின்றது.

மாநாட்டிற்கான பிற ஏற்பாடுகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றது என்ற மகிழ்ச்சிச் செய்தியை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் தங்களது மேலான ஆதரவைத்தந்து மாநாட்டை வெற்றிகரமாக்கித் தருமாறு வேண்டுகின்றோம்.

வரவேற்புக் குழுவினர்

திரண்டெழுவீர் தொண்டர் படையினரே!

பம்பாய் தி. மு. க. முதல் மாநாடு மார்ச் இறுதியில் நடைபெறும். எனவே தொண்டர் படையினருக்கு பிரதி வியாழன் தோறும் மாலையில் தாராவி கழக பணிமனையில்பயிற்சிநடைபெறும் தொண்டர்கள் தவறாது கலந்து கொள்க.

தொண்டர் படையில் சேர விரும்பும் தோழர்கள் விரைவில் பதிவு செய்து கொள்க.

எம். மாரியப்பா கே. எஸ். கண்ணதாசன்
தொண்டர் படைத் தலைவர்கள்

பம்பாய்

கொலபா தி. மு. க மாதாந்திர கூட்டம் 18-1-54ல் இரவு 10 மணிக்கு கூபரேஜ் மைதானத்தில் நடைபெற்றது. செயலாளர் கே. கே. இராமநாதன் அவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். எஸ். கே. ராஜு அவர்கள் தலைமை வகித்தார். கழக நிதிக்காக ஒரு நாடகம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

அடைப்பட்ட சிங்கங்கள்

திருச்சி 20-வது வட்டார தி. மு. கழகத்தின் பொது உறுப்பினர் கூட்டம் 31-1-54 காலை கழகக் கட்டடத்தில் நடைபெற்றது. அதுபோது கல்லக்குடி அறப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் மீது அரசியலார் வழக்கு தொடுத்து வஞ்சம் தீர்க்கும் வகையில் கடுங்காவல் தண்டனையளித்து தீர்ப்பளித்து இருப்பதை இக்கூட்டம் வன்மையாக கண்டிப்பதுடன் தீர்ப்பை எதிர்த்து அபபீல்செய்து தோழர்களை விடுவிக்க கல்லக்குடி அறப்போராட்டத் தலைவரையும் குழுவையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது. என முடிவு செய்யப்பட்டது.

'துக்ளகபட்டர் ஆட்சியில் கோமாளிக் கூத்து?'

* சுதந்தரசன் மடல் *

கனம் ஆச்சாரியார் அவர்களே நலம் வேண்டுகிறேன்.

சுயராஜ்யம்—குடியரசு என் பவைகளின் பேரால், இந்தியத் துணைகண்டமெங்கும் தேசியத் தலைவர்கள் நடத்தி வரும் ஆட்சி முறையே ஒரு விசித்திரமானது—அதிலும் நம் மாநிலத்தில் நடைபெறும் தங்கள் ஆட்சி முறை அவ்விசித்திரங்களில் தலை சிறந்து விளங்குகிறது.

ஜனநாயகம் என்று துவங்கி சர்வேஸ்வரனை வழிபடும் வரையில் ஒன்றுவிடாமல் நாவரட்சி ஏற்படும் வரையில் பேசுவதும் ஆனால் செயலிலோ அதற்கு நேர்மாருக நடப்பதிலும் இந்தியத் துணைகண்டத்திலேயே தங்களுக்கு நிகரானவர்கள் எவருமில்லை.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற பஞ்சாயத்து போர்டு உறுப்பினர்கள் மாநாட்டின்போது நடைபெற்ற சம்பவமும், அதனால் மாநாடு இறுதிவரை கலவரத்திலேயே முடிந்த விவரமும் தினசரிகள் வாயிலாக யான் அறிந்தேன்.

சுமார் 4000 பஞ்சாயத்து உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் ஐந்து ரூபாய் வரவேற்புக் கட்டணம் செலுத்தி நடத்தப்பட்ட இம்மாநாட்டிலே பஞ்சாயத்து போர்டுகளின் வேலைத் திட்டம், சிற்றூர் சீரமைப்பு ஆகிய பிரச்னைகளைப் பற்றி விவாதிக்கப்பட்டதாக தெரியவில்லை.

இம்மாநாட்டில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அதாவது செங்கற்பட்டு, வ. ஆ., தெ. ஆ. போன்ற மாவட்டங்களிலிருந்து தென்கன்னட மலபார் மாவட்டங்கள் வரை சராசரி 40 ரூபாய் செலவாக்கப்டிருக்கிறதாக தெரிகிறது இத் தொகையை பிரதிநிதிகளாகக் கலந்து கொண்ட உறுப்பினர்கள் சொந்த பணத்திலிருந்து செலவழித்தார்களில்லை. அந்தந்த பஞ்சாயத்துபோர்டே இச்செலவை ஏற்றுள்ளதாம்!

அந்தந்த சிற்றூர் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து வசதி செய்து கொடுத்தனுப்பிய பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இம்மாநாட்டின் வாயிலாக சிற்றூர்களின் நன்மைக்கான திட்டங்கள் தீட்டி செயல் முறையில் கொண்டு வருவதற்குப் பதிலாக—வம்பை விலை கொடுத்து வாங்குவதைப் போல—வர்ணாஸ்ரம கல்வித் திட்டத்தின் மகிமையைப்பற்றி எடுத்துரைக்க அரசியலாரின் அதிகாரி கச்சை கட்டிக் கொண்டு வந்தாராம்!

அன்பர் ஆச்சாரியார் அவர்களே, ஏற்கனவே பெரும்பாலான பஞ்சாயத்து போர்டுகள், உங்களின் நவீனகண்டுபிடிப்பானவர்ணாஸ்ரம கல்வி திட்டத்தை எதிர்த்து தீர்மானம் அனுப்பி யிருக்க, மீண்டும் அதுவும் சம்பந்தமில்லாத இடத்தில் அப்பிரச்னையை வலுக் கட்டாயமாக பேசவைப்பது ஜனநாயகத்திற்கு மாறுபட்டதென்பது ஒருபுறமிருக்க, குறைந்தபட்ச தன்மானமாவது இச் செயலில் இருக்க முடியுமா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறேன்.

இத்தனைக்கும் மாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் இம்மாநாட்டில் வர்ணாஸ்ரமகல்வி திட்டத்தைப்பற்றி அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆதரித்து பேசுவதை எதிர்க்கிறோம் என்று வோட்டு கொடுத்தும் அன்றைய கூட்டத் தலைவர் வலுக்கட்டாயமாகப் பேசவைத்தது எந்த ஜன நாயகத்துக்கு அல்லது ஆண்டவனுக்கு ஏற்கும் என்று கேட்கிறேன்.

சென்னை சட்டசபையின் தீர்ப்பை மதியாமல், கல்வித் திட்டத்தை அமுலாக்கும் 'புனிதத் தன்மையை' பஞ்சாயத்து உறுப்பினர் மாநாட்டின் தலைவரும் பின்பற்றினர் போலும்!

ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய்க்கு மேலான தொகையில் சிற்றூர் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து செலவிடப்பட்டு நடைபெற்ற இம்மாநாட்டில் வம்பை விலைகொடுத்து வாங்கும் கோமாளித்தனமான காரியமே நடைப் பெற்றிருக்கிறது.

இந்த விசித்திரங்களெல்லாம் தங்களைப் போன்றவர்கள் ஆட்சியில்தான் பார்க்க முடியும்! ஏனெனில் நீங்கள் பெரிய கட்சியைச் சார்ந்தவரல்லவா? அதுமட்டுமா! ஆண்டவனை அனுதினமும் மறவாமல் ஆட்சி முறையை 'அறவழிப்படி' நடாத்திச் செல்பவர் அல்லவா!

ஆகவேதான் ஆண்டவன் லீலாவினோதங்களில் பஞ்சாயத்து உறுப்பினர் மாநாட்டு நிகழ்ச்சியும் ஒன்ருகக் காட்சியளித்தது!

நரிவலம் வந்தால் நல்லதா இடம் வந்தால் நன்மையா என்று ஒருவர் கேட்டாராம்! அது எப்படியாவது ஒடித்தொலையட்டும் மேலே விழுந்து கடிக்காமலிருந்தாலே லாபம் என்ருராம் மற்றவர்.

அதைப்போலவே தங்கள் ஆட்சியில் நடைபெற்ற பஞ்சாயத்து உறுப்பினர் மாநாட்டின் லட்சணம் இருந்தது என்று அம்மாநாட்டின் பிரதிநிதிகளில் ஒருவர் என்னிடம் சித்தரித்தார். அதிலும் இவ்வுறுப்பினர் ஒரு தேசிய தோழரேயாவர்! இந்த கோமாளி கூத்துகள் இன்னும் எத்தனை நாட்களுக்கோ தெரியவில்லை!

ஆண்டவன் — அல்லது மகாகனம் பொருந்திய மிஸ்டர் மனக்குரங்கு ஆகியவர்களுக்காகிலும் காலவறை தெரியுமோ—எதற்கும் கேட்டுப்பார்க்கிறேன்.—வணக்கம்

இலட்சிய வீரர்களை மீட்போம்

அப்பீல் செய்ய ஏற்பாடு

கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்டு காராக்கிருகத்தில் அடைக்கப்பட்டுள்ள தோழர் கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம் உள்ளிட்ட 22 தோழர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கடுந்தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்யவும் சிறையிலுள்ள எல்லாத் தோழர்களையும் ஜாமீனில் வெளிவரும்படி செய்யவும் ஆன ஏற்பாடுகளுக்கு தி.மு.க. தலைமைக் கழகம் பொறுப் பேற்றுள்ளது.

1-2-54ம் நாளன்று பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் துணைச்செயலாளர் நெடுஞ்செழியன், கலைஞர் கருணாநிதி, வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி, திருச்சிமாவட்ட துணைசெயலாளர் பராங்குசம் நகர செயலாளர் மணி 'நம் நாடு' பொறுப்பாளர் பொன்னம்பலனார் ஆகியவர்களுடன் திருச்சி மத்திய சிறைசென்று அம்பில் தர்மலிங்கம், கண்ணதாசன் மற்றும் அனைவரையும் கண்டு பேசினர்.

தட்டிக் கேட்கிறது...தொடர்ச்சி

தும் நிலை இதற்குமுன் உண்டா? 'பாரத தேவி' கூட அல்லவா புலம்புகிருள்? காரணம் கல்விசப்பட்டு விட்டது. 'கனி' உதிர்கிறது.

'முழு வெற்றி பெற்றுவிட்டோம்' என மார்தட்டும் கோஷ்டியல்ல நாம்—முதல்பிறை! தோன்றிவிட்டது, நிச்சயம் முழுநிலா தோன்றும் பௌர்ணமி காத்திருக்கிறது

'கிறுக்கர்! சுயநலக்காரர்! சர்க்காரை மதியாதவர்' என்றெல்லாம் பேசியதுபோய் இன்று நாயுடு எத்தனைமுறை இந்த சர்க்காரை நாடியிருக்கிருர் பாருங்கள்! எத்தனை முயற்சிக்குப் பின்னுல்,—எவ்வளவு இதயம் வேகாமல் இவைகளுக்குத் 'தீ' வைத்து விட்டார்! தொழில் உலக எழில் நிலவை கையால் மறைத்திருக்கிருர்கள், கபோதிகள்' என்ற பொதுமக்களின் தீர்ப்பு யிப்படி.

நாட்டின் நரம்புகள் நல்ல தீரப்பு வழங்கி விட்டது, நாடாளும் சர்க்காரைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.

காரணம்; ஆளும் கட்சிகள் காற்ருடிகள்போல.

'தட்டு — திறக்கும்' என்ருர் ஏசு! உடைத்தே விட்டார் நாயுடு, இனி உள்ளே 'இருப்பவனுக்கு' அவரின் உருவம் விளங்காமற் போகாது, உள்ளே இருப்பவர்களும் ஒருவேளை இருவிழி அற்றக் குருடாராக இருந்து விட்டால்...?

வரலாறு, கூண்டுக் கிளியல்ல—குருவிக்காரன்

கைசிக்கிய குரங்குமல்ல—அது ஒரு வானம்பாடி! வானவில்லும் கூட!!

நாயுடு அவர்கள் தனது பொருளை மட்டும் உடைக்கவில்லை. திராவிட இயக்கத்துக்கும் மற்ற கட்சிக்கும் உள்ள 'மனக்கசப்பை' உடைத்திருக்கிருர்! அண்ணா வருகிற மேடைக்கு வர அஞ்சும் மற்ற அரசியல் கட்சி தலைவர்களின் தப்பெண்ணத்தை கோழை மனத்தை. உடைத்துத் தூள்தூளாக்கினர்! உண்மையிலே தென்னுடு அவருக்கு நன்றி செலுத்தத்தான் வேண்டும்!

'பொருள்களை உடைப்பதால் என்னப்பா பலன்? நேருவா, இங்கே பக்கத்திலிருக்கிருர்! பார்க்க கேழ்க்க? இது பைத்தியக்காரத்தனம்! என்றனர்.

இரயிலை நிறுத்தியபோது இப்படித்தான் இழிமொழிகளை வீசினர் 'இங்கே இரயில் நின்ருல், எங்கோ இருக்கிற நேருவுக்கா இது தெரியப்போகிறது' என்றனர்!

பின்னுலே, நேருவின் கண்களிலே நமது முகங்கள், நமது இயக்கங்கள், 'நெ. 1. எதிரியாக' நின்றுவிட்டன! எனவே விளைச்சலைப் பற்றி விளக்கம் போடுபவர்களல்ல நாம். விதை தூவுவோம்! பின் பார்ப்போம்! இது தான் முறையுங் கூட.

காங்கிரஸ் ஏகாதிபத்யத்தின் மீது இன்றுவரை 'விட்டகுறை, தொட்டகுறை' என நம்பிக்கை வைத்திருந்த காங்கிரஸ் நண்பர்களின் மனத்தையும், தனக்கு ஏற்பட்ட மானக்கேட்டை அவமரியாதையை ஆதாரங்களோடு விளக்கி, அவர்களின் இருதயங்களை கட்டி வைத்திருந்த சங்கிலித் தொடரையும் தன்னின் சம்மட்டியால் உடைத்து, விடுதலை செய்துவிட்டார்! வடவரின் கொடுமையை அவர்களின் விழிகள் திரும்பிப் பார்த்துவிட்டன! தேசியம்—இந்தியன், என்பதெல்லாம் தூள்தூளாக உடைக்கப்பட்டு, தென்னுடு—தன் இனம் என்ற பாசத்திற்கு அவர்களும் உடையவராகி விட்டனர்!

பாகுமொழிப் பேசி, தென்னுட்டைச் சுரண்டிப்பிழைக்கும் வடநாட்டின் வஞ்சகத்தைக் காங்கிரஸ் தலைவர்களே விளக்கினர். வளமான அறிவிருந்தும் நாயுடு வாழும் திராவிடம் வறுமைக் கூடாரமாக விளங்குவதற்குக் காரணமும் தரப்பட்டு விட்டன! விஞ்ஞான நாயுடுவை வீணராக ஆக்கிய அரசியல் சூதாடிகளின் சூழ்ச்சியும் பலால் அறிவிக்கப்பட்டு விட்டன.

சிங்க நிகர்த் தமிழன் நாயுடுக்கு செல்வாக்கு தந்தால் 'சிமையை' கூட விளக்கிக் கேழ்ப்பார் எனவே அவரை சிரழிப்போம் என்ற மேலிடம் அவர்களை அனுமதிக்காமல் கேலி செய்கிறது என்று தெளிவாக்கப் பட்டது,

நடமாடும் எரிமலையாக நாயுடு நின்ருர். சுழன்ருடும் தீவட்டியாக சுழல்மொழி தெளித்தார்! தென்னுட்டுக்கு வடநாடு செய்யும் துரோகத்தை தெளிவாக்கினர். தவறு நமதுள்ளங்களில்—நாட்டோர் உள்ளங்களில் தீ வைத்தார்! டெல்லி ஆதிக்கபுரியினரே, நாடாள்வோரே இனியாகிலும் உமது பதில் என்ன? ஜி. டி. நாயுடு போன்ற தொழில் நிபுணர்களுக்கு இனியும் அலட்சியமா? அணேப்பா?

—கோ. இறைமுடிமணி

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் : என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலேயன்ஸ் ரைஸ்மில் தெரு. சென்னை-1.